(ஆ) வேறு சில நகரங்களை இணைக்கும் வகையில் இத் தடத்தினை மாற்றி மீண்டும் விரைவுப் பேருந்துகளை இயக்குதல் குறித்து திருவள்ளுவர் போக்குவரததுக் கழகம் பரிசீலித்து காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு இரண்டு பேருந்துகளை 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி முதல் இயக்க முடிவு செய்துள்ளது.

கால்நடை மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைகள்.

*வினா எண் 505—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் சித்த வைத்திய முறைகள் செயல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் சித்த வைத்திய முறைகள் முழுமையாக செயல் படுத்தப்படுவதில்லை. எனினும் சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்ட சில மருந்துகள் கால்நடை மருந்தகங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : கால்நடை துறையில் சித்த வைத்திய முறைகளைப் பயன்படுத்துவதினால் குறைவான செலவு ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி அதையொட்டி அரசாணை பிறப்பிக்கப்பட்டு, சித்த வைத்திய முறையை கட்டாயமாக மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தும் அந்த முறை கிராமங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்றால் ஐம்பது பைசாவில் சுக்கு வாங்கி உபயோகிப்பதை விட்டு நவீன முறையில் பெல்லிஸ் டிங்சர் பத்து ரூபாய்க்குள்ள மருந்தினைப் போடுகிறார்கள். ஆக சித்த வைத்திய முறையை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கால்நடை மருத்துவமனைகளில் கட்டாயமாக சித்த வைத்திய முறைகளை அமல்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.

1981 மார்ச் 26]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : கால்நடை துறைக்குத் தேவையான மருந்துகளை சென்ட்ரலைஸ்ட் பர்சேஸ் ஸ்கீம் என்ற முறையில் வாங்குவதற்குப் பதிலாக சென்னையில் உள்ள மதறாஸ் டிப்போவில் வாங்குகிற முறையை மீண்டும் அமல்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சு. பாலன் : வியாசர்பாடியைச் சுற்றியுள்ள எருக்கஞ் சேரி, புழலேரி போன்றவை தற்போது சென்னையோடு சேர்ந்து விட்ட காரணத்தால் அங்குள்ள கால்நடைகளுக்கு வயாதி ஏற்பட்டால் வேப்பேரிக்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வியாசர்பாடியிலேயே இடம் இருக்கிற காரணத்தால் அங்கேயே ஒரு மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்யப் படுமா?

(பதில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினா மூலக் கேள்வியை யொட்டி இருக்கவேண்டும் வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கர்நாடக மாநிலத்தில் அங்கு வாழும் தமிழர்களுக்கு எதிராக ஒட்டப்பெறும் சுவரொட்டிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பொ. விஜயராகவன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன் ஆகியோர், 'சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் வாழும் தமிழர்களை அச்சுறுத்தும் விதத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தேசீய ஒருமைப் பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் ஏற்பட்டிருப்பதாலும், தமிழர்களை சமுதாயப் புறக்கணிப்புச் செய்வோம் என்று அச்சுறுத்தும் வகையில் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங் களும் விநியோகிக்கப்பட்டிருப்பதாலும் அங்கு வாழும் தமிழர் களுக்குப் பீதியும் பாதுகாப்பற்றத் தன்மையும் ஏற்பட்டுள்ள தாலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை' குறித்து விவாதிக்க